

வருடாந்த அறிக்கை

2018

புத்தசாசன நிதியம்

இலக்கம் 135

ஸ்ரீ மான் அநாகாரிக்க தர்மபால மாவத்தை,

கொழும்பு 07

தொலைபேசி - 0112303293

மின்னஞ்சல் - bsfund@mbs.gov.lk

இணையத்தளம் - -www.mbs.gov.lk/web/buddhasasana-fund

உள்ளடக்கம்

	பக்க இலக்கம்
01. புத்தசாசன நிதியம்	
1.1 தொலை நோக்கு	1
1.2 செயற்கூற்று	1
1.3 நோக்கம்	1
1.4 செயலாற்றுகை	1
1.5 நிதியத்தின் வரையறை	2
02. நிர்வாகக் கட்டமைப்பு	2
03. உத்தியோகத்தர்கள் விபரம்	3
04. செயலாற்றுகை முன்னேற்றம்	3
4.1 சாமனேர நிறுவனங்களை நடாத்துவதற்கான நிதியுதவியைப் பெற்றுக் கொடுத்தல்	3-4
4.2 சாமனேர நிறுவனங்களுக்கான வருட இறுதி பரீட்சைகளை நடாத்துதல்	5
4.3 வசதி குறைந்த விகாரையில் மலசல கூட வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதியுதவிகளை வழங்குதல்	6-7
4.4 சம்புத்த ஜயந்தி சாமமேனர மாணவர்களுக்கான நிதியுதவித்திட்டம்	7-8
4.5 சீன மொழியில் பயிற்சி வகுப்புகளை நடாத்துதல்	8
4.6 பிக்குமார்களுக்கான வைத்திய நிதியுதவிகளை பெற்றுக்கொடுத்தல்	8-9
4.7 முதுமைப் பருவத்தில் துறவறத்தில் இணைந்த பிக்குமார்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்	9-10
05. எதிர்கால இலக்கு	10-11
06. நிதி முகாமைத்துவம	12
6.1 வரவு செலவுக் கணக்கு	12-13
6.2 மீதி விபரம்	14-15
6.3 மீதி படிவம்	16
6.4 கணக்காய்வாளர் நாயக அறிக்கை	17-23

01. புத்தசாசன நிதியம்

1.1 தோலை நோக்கு

பௌத்த பண்பாடுகளைப் பேணும், நற்பண்புகள் நிறைந்த ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றைத் தோற்றுவித்தல்.

1.2 பணிக்கூற்று

சம்புத்த சாசனத்தை பாதுகாத்து போஷிப்பதன் பொருட்டு பிக்குமார்களின் சிந்தனை ரீதியான மற்றும் சமூக மேம்பாட்டிற்கு பங்களிப்பினை வழங்கி விகாரையின் பௌதீக வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் புத்தசாசனத்தின் நிலையுறுதியின் பொருட்டு செயற்படுதல்.

1.3 நோக்கம்

I. புத்தசாசனத்தை பாதுகாப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

II. புத்தசாசனத்தை போஷிப்பதன் பொருட்டான அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

1.4 நிதியத்தின் செயற்பாடுகள்

சாமனேர பிக்குமார்கள் 05 பேருக்கு மேலதிகமாக சாமனேர கல்வி பயிலும் சாமனேர நிறுவனங்களுக்கு மாதாந்தம் நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்.


1. சாமனேர நிறுவனங்களுக்கு மாதாந்த நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்
2. சாமனேர நிறுவனங்களில் கல்வி பயிலும் சாமனேர பிக்குமார்களின் சமய அறிவையும் பழக்க வழக்கங்களையும் கணீப்பீடு செய்தல்.
3. நாடளாவிய ரீதியில் உள்ள வசதி குறைந்த விகாரைகளின் பௌதீக தேவைகளைப் பூர்த்திசெய்தல்
4. சம்புத்தத்வ ஜயந்தி சாமேனர நிதியத்திட்டம்
5. சீன மொழி கற்கை நெறிகளை நடாத்துதல்
6. பிக்குமார்களுக்கு வைத்திய தேவைகளின் பொருட்டு நிதியுதவியைப் பெற்றுக் கொடுத்தல்
7. முதுமைப் பருவத்தில் துறவறத்தில் இணைந்த மற்றும் இணையும் பிக்குமார்களுக்கு துறவற வாழ்கைக்குரிய பழக்க வழக்கங்கள் மற்றும் சமய அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

1.5 நிதியத்தின் வரையறை

“இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 9 ஆவது அத்தியாயத்தில் பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது “அதன் 10 ஆவது மற்றும் 14 ஆவது அத்தியாயத்தின் (இ) பந்தியில் ஏனைய சமயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாத்து புத்தசாசனத்தை பாதுகாத்து போஷித்தல் வேண்டுமெனவும்” குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தலுக்கமைய 1990 இன் 35 ஆம் இலக்கத்தைக் கொண்ட சட்டமூலத்தினூடாக புத்தசாசனத்தை பாதுகாத்து போஷிப்பதன் பொருட்டு நிதியை சேகரித்து நிர்வகிப்பதன் முகமாக புத்தசாசன நிதியம் என இந்த நிதியமானது நிறுவப்பட்டுள்ளது. புத்தசாசனத்தை பாதுகாத்து போஷிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்கி நிதியத்தின் செயற்பாடுகளுக்கு அனுகூலமான செயற்பாடுகளைப் புத்தசாசன நிதியம் மேற்கொள்ள வேண்டுமென சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. நிர்வாகக் கட்டமைப்பு



03. உத்தியோகத்தர் விபரம்

1990 இன் 35ஆம் இலக்க புத்தசாசன நிதியத்தின் 7 (ஈ) மற்றும் 14 ஆம் அத்தியாயங்களுக்கமைய நிர்வாக சபையினால் பிறப்பிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைய நிதியத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக நிர்வாக சபையினால் நியமிக்கப்படும் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். இச்செயலாளர் நிதியத்தின் பிரதான கணக்கு வழங்குநராகயிருப்பதுடன், அனைத்து சந்தர்பத்திலும் இவர் புத்தசாசன அமைச்சில் கடமையாற்றும் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதற்கமைய இலங்கை நிர்வாக சேவையில் தரம் I ஐ சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் தனது நிரந்தர கடமைகளுக்கு மேலதிகமாக இச்செயலாளர் பணிகளுக்குரிய கடமைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் நிதியத்தின் கணக்காளராக அமைச்சின் கணக்காளர் கடமைகளை மேற்கொள்வதுடன், தமது அன்றாட கடமைகளுக்கு மேலதிகமாக அமைச்சின் உத்தியோகத்தர்கள் நிதியத்தின் கடமைகளுக்கு உதவிபுரிகின்றனர்.

04. நிதியத்தின் செயலாற்றுகை

4.1 சாமனேர நிறுவனங்களுக்கு நிதியுதவியைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்

இல்லற வாழ்கையைத் துறந்து துறவற வாழ்க்கையில் இணைந்து கொள்ளும் பிள்ளையை குறுகிய காலத்தினுள் பிரிவெனாக்களில் கல்வி பயிலுவதற்கு ஈடுபடுத்தப்படுகிறார்கள். பண்டைய காலத்தில் இடம்பெற்ற நடைமுறையாவது துறவறத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பிள்ளை இரண்டு அல்லது மூன்று வருடங்கன் விகாரையில் தங்கியிருந்து துறவற வாழ்க்கை மற்றும் பிரித், பண போதனை தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொண்டுதனது சுய விருப்பத்துடன் துறவறவாழ்க்கையில் தன்னை ஈடுபுடுத்திக் கொள்வதாகும். இருப்பினும் நிகழ்காலத்தில் துறவறத்தில் இணையும் பிள்ளைகளுக்கு துறவறச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முன்னர் துறவற வாழ்க்கை பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்பங்கள் மிகவும் குறைவாகும்.

இந்தத் தேவையை புரிந்துகொண்டு புத்தசாசன நிதியம் நிறுவப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட மிகவும் பயனுள்ள கருத்திட்டமான இச்சாமனேர கல்வி நிகழ்ச்சத்திட்டத்தினைக் குறிப்பிட முடியும் இளம் சாமனேர பிக்குமார்களுக்கு துறவறம் தொரடர்பான ஈடுபாட்டினை ஏற்படுத்தல் துறவற வாழ்க்கை தெரடர்பில் சிறந்த சிந்தனைகளை மேம்படுத்தல் மற்றும் நற்பழக்கங்களைக் கொண்ட பிக்குவினை தோற்றுவித்தல் சாமனேர நிறுவனத்தின் நோக்கமாகும்.

நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகைமைகள்

I. அறநெறிப் பாடசாலைக்கு மேலதிகமாக வேறு கல்வி நிறுவனங்களை நடாத்திச் செல்லாத ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

II. விகாரைக்குரிய மொத்த அங்கங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

III. கல்வி பயிலும் சாமனேர பிக்குமார்கள் அங்கு தங்கியிருத்தல் வேண்டும்.

IV. பிக்குமார்கள் தங்கியிருப்பதற்கு தேவையான தங்குமிடம், நீர், மின்வசதி, மலசலகூட வசதிகள் டீபான்ற அடிப்படை வசதிகள் இருத்தல் வேண்டும்.

V. காலை மற்றும் மதியம் போதுமான அளவு அன்னதானத்தினை வழங்கக்கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட விகாரையாக இருத்தல் வேண்டம்.

VI. இளைய சாமனேர பிக்குமார்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு ஒழுக்க சீலரான பிக்கு ஒருவர் இருத்தல் வேண்டும்.

2018 இல் நிதியுதவி பெற்றுக்கொடுக்கப்பட்ட நிறுவனங்கள்

தொடர் இலக்கம்	நிறுவனத்தின் பெயர் முகவரி	நிறுவனத்திலுள்ள சாமனேர பிக்குமார்களின் எண்ணிக்கை
01	கட்டுகஸ்தோட்டை சுதம்மானந்த சாமனேர நிறுவனம்	17
02	தல்தென மிகிந்து சாமனேர நிறுவனம்	06
03	குன்னேபான ஸ்ரீ தம்மபால சாமனேர நிறுவனம்	09
04	காலி சிறிசுதஸ்ஸி சாமனேர நிறுவனம்	08
05	காலி வித்யாதீப சாமனேர நிறுவனம்	05
06	அமுனுகொடை சிறிபெரகும் சாமனேர நிறுவனம்	05
07	கண்டி சிறி தம்மரதன சாமனேர நிறுவனம்	09
08	எம்புல்புர சம்புத்தாலோக்க சாமனேர நிறுவனம்	08
09	தம்புல்லை ஜினரதன சாமனேர நிறுவனம்	11
10	ஹரிபிட்டிய வித்யாவங்ஸ சாமனேர நிறுவனம்	11
11	மித்தெனிய சிறி வஜிராராமை சாமனேர நிறுவனம்	12
12	தங்காலை சிறி ஆரியவங்ஸ சாமனேர நிறுவனம்	13
13	அம்பகஸ்வெவ வித்யாவங்ஸ சாமனேர நிறுவனம்	13
14	கொட்டபொல சாராநந்த சாமனேர நிறுவனம்	11
	மொத்தம்	**138**

4.2 சாமனேர நிறுவனங்களில் வருட இறுதிப் பரீட்சைகளை நடாத்தும் நிகழ்ச்சித் திட்டம்

புத்தசாசன நிதியம் நிறுவப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட மிகவும் பயனுள்ள ஒரு கருத்திட்டமாக இச்சாமனேர கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை தெளிவாக இணங்கண்டுகொள்ள முடியும. இளம் சாமனேர பிக்குமார்களுக்கு துறவறத்தில் ஈடுபாட்டினை ஏற்படுத்துதல் பிக்கு ஒருவரின் வாழ்க்கை தொடர்பில் நற்சிந்தனைகளை கட்டியெழுப்புதல் மற்றும் நற்பழக்கவழக்கங்களையும் பூரண அறிவையும் கொண்ட பிக்கு ஒருவரை தோற்றுவித்தல் சாமனேர நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்நோக்கத்திற்கமைய பயிற்றுவிக்கப்பட்ட சாமனேர பிக்குமார்களின் அறிவும், சிந்தனை மேம்பாடும் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது. அதற்கமைய போதுமான பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் அனைத்து வருட இறுதியிலும் புத்தசாசன நிதியத்தினால் நடத்தப்படும் வருட இறுதிப் பரீட்சைக்கு சாமனேர பிக்குமார்களுக்கு தோற்ற முடியும். இக்கணிப்பீட்டின் போது எழுத்துப் பரீட்சையுடன் பிரயோகப் பயிற்சி பற்றியும் கணிப்பீடானது நாயக்க தேரர்களைக் கொண்டமைந்த நடுவர் சபையொன்று மேற்கொள்ளப்படுகின்றது

இப்பரீட்சையில் விஷேட மற்றும் அதிவிஷேட சித்தியை பெறும் சாமனேர பிக்குமார்களின் பொருட்டு விசேட கணிப்பீடொன்று புத்தசாசன நிதியத்தினால் மேற்கொள்ளப்படும்.

செயற்படுத்தப்படும் முறை

I. பதிவு செய்யப்பட்டுள்ள சாமனேர நிறுவனங்களில் இருந்து பரீட்சைக்கான விண்ணப்பக்கங்களை கோரல்

II. பரீட்சைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்

III. பரீட்சையை நடாத்துதல்

IV. புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொடுத்தல்

2018 ஆம் வருடம் நடாத்தப்பட்ட பரீட்சை பற்றிய விபரங்கள்

❖ பரீட்சை நடாத்தப்பட்ட இடம்	களனிய பேலியகொடை வித்யாலங்கார பிரிவெனா
❖ நடாத்தப்பட்ட திகதி நேரம்	2018.12.25 (மு.ப. 9.00 – 3.00)
❖ பரீட்சைக்கு தோற்றிய பிக்குமார்களின் எண்ணிக்கை	56
❖ செலவுசெய்யப்பட்ட நிதி	ரூ. 506,535.00

4.3 வசதி குறைந்த விகாரைகளில் மலசல கூட வசதிகளை மேம்படுத்துவதன் பொருட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள விகாரைகளில் அடிப்படை வசதிகள் பூர்த்திசெய்யப்படாத பெருமளவிலான விகாரைகள் காணப்படுகின்றன. குறைந்த வசதிகளைக் கொண்ட அவ்விகாரைகளில் வாசம் செய்யும் பிக்குமார்களின் மலசலகூட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்

ஒரு வருடத்தில் வசதி குறைந்தபின் தங்கிய பிரதேச செயலகப் பிரிவென்றைத் தெரிவு செய்து அப்பிரதேச செயலகப் பிரிவில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பட்டியல் அடங்கிய அறிக்கைக்கு அமைய விகாரைகளை தெரிவு செய்தலானது புத்தசாசன நிதியத்தின் நேரடி கோரிக்கைக்கு அமைய பிரதேச செயலாளரினதும் பௌத்த கலாசார உத்தியோகத்திரினதும் சிபாரிசுடன் தெரிவு செய்யப்பட்டு நிர்வாக சபையின் அனுமதியுடன் நிதியுதவி பெற்றுக்கொடுக்கும் செயற்பாடானது இடம் பெறுகின்றது.

2018 ஆம் வருடத்தில் மலசல கூட வசதிகளின் பொருட்டு நிதியுதவி பெற்றுக்கொடுக்கப்பட்ட விகாரைகள்

தொடர் இலக்கம்	விகாரையின் பெயர்	முகவரி	பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி
1	ஸ்ரீ சாக்கிய முனிந்தாராமை	கப்புவிட்டை, பல்லேகம, மொரொந்தொட்டை	**100,000**
2	ஸ்ரீ தம்மதின்னாராமை	தலுக்கலை, ரம்புக்கனை	**100,000**
3	ஸ்ரீ நாகவனாராமை விகாரை	கொஸ்ஹின்ன, வலல்கொடை, ரம்புக்கனை	**100,000**
4	ஸ்ரீ போதிருக்காராமை	கங்கேகும்புர, ரம்புக்கனை	**100,000**
5	ஸ்ரீ கெத்தாராமை	தல்தேவ, ரம்புக்கனை	**100,000**
6	ஸ்ரீ வித்யா ஸ்ரீமகா விகாரை	பரப்பே, ரம்புக்கனை	**100,000**
7	ஸ்ரீ வர்தனாராமை விகாரை	வலல்கொடை, ரம்புக்கனை	**100,000**
8	ஸ்ரீ நந்தனாராமை	கந்தமுல்லை, திவெலை, பல்லேகம	**100,000**
9	ஸ்ரீ தபோவனாராமை	உடகும்புர, கொப்பேகலை, கலகெதர	**100,000**
10	ஸ்ரீ சைலதலாராமை	கேட்டலேவ, கலெண்பிந்துனுவெவ	**100,000**
11	ஸ்ரீ அபினவாராமை	வெட்டிய,பஹலகம,ஆனமடுவை	**100,000**
12	ஸ்ரீ மகிந்தாராமை	பெஹினியமெந்தரை, அரணாயக்க	**100,000**
13	ஸ்ரீ சம்புத்த ஜயந்திகாராமை	திஸ்ஸமல்வெவை, யட்டகம, ரம்புக்கனை	**100,000**
14	ஸ்ரீ போதிராஜாரமை	யட்டகம	**100,000**
15	ஸ்ரீ தொடம்தெனிய புராண விகாரரை	கலன்நாயக்க	**100,000**
16	ஸ்ரீ சுகதவங்ஸாராமை	மல்வல, நவசேனபுர	**100,000**
17	ஸ்ரீ லங்காபுர ரஜமகா விகாரை	நெலுவெவ	**100,000**
18	ஸ்ரீ ஸ்வர்ணகிரி விகாரை	போஅத்த, வெலிகந்தை	**100,000**
19	ஸ்ரீ சாம விகாரை	மட்டகளப்பு வீதி, செவனபிட்டிய	**100,000**

20	போதிமலு விகாரை	குருலுபைத்தை, நவ மஹசேன்புரம்	**100,000**
21	ரிதீ விகாரை	ரதீபொக்குன, நெலுவெவ	**100,000**
22	நாசெவன ஆரண்ய சேணாசனை	மகாவெவ, செவனபிட்டிய	**100,000**
23	தக்ஷிணாகிரி விகாரை	மகாவெவ, செவனப்பிட்டி	**100,000**
24	நாமல்கம ரஜமகா விகாரை	நாமல்கம, வெலிகந்தை	**100,000**
25	கந்தே விகாரை	கந்தக்காடு, சிங்கபுர	**100,000**
26	ஸ்ரீ சம்போதிகாஷ்யாராமை	3 ஆம் படிமுனை, செவனபிட்டி	**100,000**
27	சாந்தி நிகேதனாராமை	மகாவெவ, மனம்பிட்டிய	**100,000**
28	ஸ்ரீ சுசில விகாரைவிகாரை	கெலியாவிலை, வெலிகந்தை	**100,000**
29	ஜயசேகராராமை	அசேலபுரம் வெலிகந்தை	**100,000**
30	ஸ்ரீ சுபோதாராமை	மகுல் பொக்குனை, வெலிகந்தை	**100,000**
	மொத்த நிதி		**3,000,000.00**

4.4 சம்புத்த ஜயந்தி சாமனேர மாணவர்களுக்கான நிதியுதவித்திட்டம்

சம்புத்தவ ஜயந்தி வருடத்துடன் இணைந்ததாக 2010 ஆம் வருடம் தொடக்கம் துறவறத்தில் இணைந்து கொண்ட சாமனேர பிக்குமார்களின் பொருட்டு விஷேடமாக சாமனனேர மாணவ உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 2014 ஆம் வருடம் செப்டெம்பர் மாதத்தின் பின்னர் துறவறத்தில் இணைந்த சாமனேர பிக்குமார்களுக்கும் இத்திட்டத்தில் உள்வாங்கப்படுகின்றனர் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற் கூறப்பட்ட காலப்பகுதியில் துறவத்தில் இணைந்த சாமனேர பிக்குமார்களின் கல்வி நடவடிக்கைகள் அல்லது வேறு தேவைகளின் பொருட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் சாசனத்தின் நிலையுறுதிக்கு தேவையான ஒத்துழைப்பு அவர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றது இந்த சாமனேர பிக்குமார்களுக்கான நிதியுதவித்திட்டத்திற்கு கீழே கூறப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள சாமனேர பிக்குமார்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்

i. 2010 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2013 வெசாக் வாரத்தின் இறுதிநாள் வரையிலான காலப்பகுதியினுல் துறவறத்தில் இணைந்து சாமனேர பிக்குவாக இருத்தல் வேண்டும்
ii. துறவறத்தில் இணைந்து தினத்திற்கு 18 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்
iii. துறவறத்தில் இணைந்து 3 மாதங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
iv. பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் சாமனேர பதிவினைப் பெற்றிருத்தல் வேண்டும்
v. ஒரு விகாரையில் இருந்து ஆகக் கூடியது பத்து சாமனேர பிக்குமார்களே தெரிவு செய்யப்படுவர்
vi. 2014 செப்டெம்பர் மாதத்தின் பின்னர் துறவறத்தில் இணைத்த அனைத்து பிக்குமார்களையும் இச்சாமனேர பிக்குமாருக்கான மாணவ நிதியுதவித்திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

சாமனேர பிக்குமார்களுக்கான சாமனேர மாணவ நிதியுதவித்திட்டத்தின் கீழ் 2016/08/10 ஆம் திகதி இடம்பெற்ற 76 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அனுமதிக்கமைய 2016 செப்டம்பர் மாதம் தொடக்கம் சாமனேர பிக்கு ஒருவருக்கு மாதாந்தம் ரூ. 700/=வீதம் செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் மாத்திரம் சாமனேர பிக்குமார்களுக்கான கொடுப்பனவாக ரூ.5,937,659/= நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் தபாலாகக் கட்டணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4.5 சீன மொழிக் கற்கை நெறியை நடாத்துதல்

நம் நாட்டு பிக்குமார்களின் மொழி அறிவு மற்றும் கலாசார தனித்துவம் பற்றிய கல்வியும் மிக முக்கியமான ஒரு விடயமாகும் பல்வேறுபட்ட மொழிகள் மற்றும் கலாச்சாரங்களுக்குமிடையில் தற்போது சீன மொழிக்கும் கலாச்சாரத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது சீன மொழி மூலம் உயர் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொடுத்து தேரவாத மற்றும் மகாயான பௌத்த தர்மம் தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ள சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பது இந்நிறுவனத்தின் நோக்கமாகும்

2018 ஆம் வருடத்தில் நடத்தப்பட்ட கற்கைநெறி தொடர்பான தகவல்கள்

நிறுவனம்	முகவரி	நிதி
சீன மொழி மற்றும் கலாசார கற்கை நிறுவனம்	தெகிமடுவை, மாவனெல்லை.	ரூ.257,975.00

4.6 பிக்குமார்களுக்கான வைத்திய செலவுகளுக்கான நிதியுதவித்திட்டம்

நாடளாவிய ரீமியில் துறவறம் செய்யும் பிக்குமார்களின் பொருட்டு வைத்தியச் செலவுகளுக்கு நிதியுதவியைப் பெற்றுக்கொடுக்குமு் முறைமையொன்று நடைமுறைப்பட்டு வருகின்றது. 2559 ஆவது வெசாக் உற்சவத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் வாசம் செய்யும் பிக்குமார்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் தேவைப்படும் வைத்தியச் செலவுகளின் பொருட்டு இதன் மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்றது.

இதன்போது நாடளாவிய ரீதியில் வாசம் செய்யும் பிக்குமார்களில் தகைமையுடைய பிக்குமார்களுக்கு பிரதேச செயலாளர், சாசனப் பாதுகாப்புச் சபையின் பதிவாளர் தேரர் ஆகியோரது சிபாரி சுமற்றும் வைத்திய சிபாரிசுகளுக்கு அமைய வைத்திய செலவுகளுக்கான ரூ. 5000 அல்லது ரூ. 3000 வீதம் நிதியுதவியினை பெற்றுக்கொடுக்கப்படுகின்றது

2018 ஆம் வருடம் 21 விண்ணப்பங்களுக்கும் வண. வெல்லபம்பிடியே இந்தரதன தேரர் அவர்களுக்கு கண் சத்திர சிகிச்சையின் பொருட்டு ரூ. 80,000 நிதியும் நிர்வாக சபையின் அனுமதியுடன் செலுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட வைத்தியச் செலவுகளுக்கான நிதியுதவி பற்றிய விபரம்

தொடர் இலக்கம்	தேரரின் பெயர்	நோய்
1	வண. T. சுசீம தேரர்	**சுதைக் கரைப்பு**
2	வண. D.பேமரதன தேரர்	**கண்பார்வை குறைவு**
3	வண. K.பேமரதன தேரர	**நீரிழிவு**
4	வண. S.சுமங்கல தேரர்	**இதய நோய்**
5	வண. P.நந்தரன தேரர்	**புக்கவாதம்**

6	வண. K. ஞானரதன தேரர்	**கண்பார்வை குறைவு**
7	வண. D.புஞ்ஞாரதன தேரர்	**புக்கவாதம் புற்றுநோய்**
8	வண. N.ராஹுரகல தேரர்	**நரம்பத் தளர்ச்சி**
9	வண. D.அரியதம்ம தேரர்	**இரத்த சோகை**
10	வண. வெலமிட்ட தம்மாநந்த பிக்குனி	**புற்றுநோய்**
11	வண. M. திலகசிறி தேரர்	**இதய நோய்**
12	வண. G.மகிந்த தேரர்	**நீரிழிவு**
13	வண. M. விஜித தேரர்	**இதய நோய்**
14	வண. B.விபுலசிறி தேரர்	**இதய நோய்**
15	வண. B. நந்தாலோக்க தேரர்	**இதய நோய**
16	வண. U. நந்தரதன தேரர்	**நீரிழிவு**
27	வண. G. சுமனநாக தேரர்	**நீரிழிவு**
18	வண. S. விமலவங்ஸ தேரர்	**இரத்த சோகை**
19	வண. S. சத்தாசீல தேரர்	**இரத்த சோகை**
20	வண. Y. சுமங்கல தேரர்	**நீரிழிவு**
21	வண. W. தம்மரதன தேரர்	**நீரிழிவு**
22	வண. W. இந்தரதன தேரர்	**கண்பார்வை குறைவு**

4.7 முதுமைப் பருவத்தில் துறவறத்தில் இணைந்து கொண்ட பிக்குமார்களுக்கான பயிற்சியைப் பெற்றுகொடுத்தல்

முதுமைப் பருவத்தில் துறவறத்தில் இணைந்து கொள்ளும் நிலை அதிகரித்துக் காணப்படுவதுடன், அவ்வாறான பிக்குமார்கள் துறவற வாழ்க்கை தொடர்பில் பூரண பக்குவமின்றி மேற்கொள்ளும் செயற்பாடுகள் காரணமாக பக்தர்களின் வெறுப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் இவர்களின் சாசனத்துக்கு முரணான செயற்பாடுகள் காரணமாக அவமதிப்பிற்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

அதற்கமைய இத்தகைய பிக்குமார்களுக்கு துறவற வாழ்க்கையின் மகத்துவத்தையும் துறவறத்துக்கும் இல்லறத்திற்குமிடையிலான வேறுபாடு மற்றும் அடிப்படை பழக்கவழக்கங்களை முறையாக தெளிவுபடுத்துவதன் பொருட்டு இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

மாவட்ட செயலாளர்களினூடாக பிரதேச செயலாளர்களிடமிருந்து குறித்த பிரதேசத்திலுள்ள விகாரங்களில் இருந்து உள்ள விகாரைகளில் முதுமைப்பருவத்தில் துறவறத்தில் இணைந்து கொண்ட பிக்குமார்கள் பற்றிய விபரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

கிடைக்கப்பெறும் விபரங்களுக்கு அமைய மாவட்டத்தினுள் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படும்.

மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் பௌத்த மத கலாசார உத்தியோகத்தரின் உதவியுடன் மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு நிகழ்விற்கு குறைந்தது 10 பிக்குமார்கள் பங்குபற்றுதல் வேண்டும்.

2018ம் ஆண்டு வருடத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விபரங்கள்.

மாவட்டம்	இடம்	தொடர்பாடல	வழிநடத்தல்	நாட்கள்	பங்கு பற்றிய பிக்குமார்கள் எண்ணிக்கை
காலி	கொஸ்கொட சதஹம் மெதுர	காலி மாவட்ட செயலகம், பலபிட்டிய பிரதேச செயலகம்	வண. கஹகல சாராநந்த தேரர் அவர்கள்	3	10
காலி	பத்தேகம கிம்பி எல பிக்குமார் விடுதி	காலி மாவட்ட செயலகம், பலபிட்டிய பிரதேச செயலகம	பம்பரவானே திலகரத்ன தேரர் அவர்கள்	3	13

இதன் பொருட்டு இவ்வருடம் ரூ. 170.499.00 செலவிடப்பட்டது

05. எதிர்கால இலக்கு

2019ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்தற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்வுகள்

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்	2019 செயற்திட்டத்திற்கு அமைய எதிர்பார்க்கப்படும் இலக்குகள
1.	சாமனேர நிறுவனங்களை நடாத்துவதன் பொருட்டான நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்	• 10 சாமனேர நிறுவனங்களின் பொருட்டுரூ. 4387.00.00 நிதியுதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
2.	சம்பத்தத்வ ஜயந்தி பொறுப்பாளர் மாணவர் நிதியத்திட்டம்	• 1000 சாமனேர பிக்குமார்களின் பொருட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
3.	நாடளாவிய ரீதியில் வாசம் செய்யும் பிக்குமார்களுக்கு வைத்திய செலவுகளுக்கான நிதியுதவித்திட்டம்	• நாடளாவிய ரீதியில் வாசம் செய்யும் பிக்குமார்களில் தகைமையுடையவர்களின் பொருட்டு பிரதேச செயலாளரினதும் சாசனப் பாதுகாப்பு சபை பதிவாளர் தேரரினதும் மற்றும் வைத்தியரினதும் சிபாரிசுக்கு அமைய வைத்தியச் செலவுக்கான நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்

4.	முதுமை பருவத்தில் துறவறத்தில் இணைந்து கொண்ட பிக்குமார்களுக்கான பிரயோகப் பயிற்சித்திட்டம்	• நிகழ்வுகளின் எண்ணிக்கை 4 ஆகும்.
5.	புதுபுத் சுரக்ஷா	• இவ்அமைச்சில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் ஒன்றுடன், வேறு காப்புறுதிப் பத்திரங்களைக் கொண்டிராத தேரர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது - வைத்திய பரிசீலனைக் கட்டணம் - வைத்திய கட்டணம் - மருந்து செலவு

புத்தசாசன நிதியம்

2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது.

வருமான செலவினக் கணக்கு

	குறிப்பு	2018	2017
வருமானம்		ரூ. பா.	ரூ. பா.
முதலீட்டு வருமானம்	4	54,726,946.34	52,172,259.95
அறநெறிப் பாடநூல்களின் விற்பனை இலாபம்	5	298,277.00	211,843.77
நன்கொடைகளும் ஏனைய வருமானமும்	6	5,500.00	11,000.00
மொத்த வருமானம்		**55,030,723.34**	**52,395,103.72**
கழிப்பனவுகள் கருத்திட்ட செலவுகள்			
புதிய பிக்கு நிறுவனங்களுக்கான உதவுகை		1,090,000.00	1,365,000.00
புதிய பிக்கு நிறுவனங்கள் - மேற்பார்வைச் செலவு		80,597.00	40,703.00
புதிய அனுசரணை வழங்கலுக்கான பங்களிப்பு கட்டணம்		5,937,659.00	5,855,853.00
பிக்கு மருத்துவ உதவி		2,219,000.00	1,645,000.00
சுகாதார நடவடிக்கைகளுக்கான நிதி உதவுகை		3,000,000.00	-
புதிய பிக்கு நிறுவனசார் பரீட்சைகள்		506,535.00	754,304.00
முதிய பிக்கு நடத்தை ஊக்கவிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கான செலவுகள்		170,499.00	112,418.76
சீன மொழிப் பயிற்சி செலவு		257,975.00	
நிருவாகச் செலவுகள்			
எழுதுபொருட்களும் அலுவலக உபகரங்களும்		500.00	24,905.00
கட்டுப்பாட்டுச் சபைக்கான கொடுப்பனவும் பதவியினருக்கான சம்பளமும்		89,163.75	16,819.00
பிரயாணச் செலவுகள்		13,630.00	38,870.00
கணனிப் பயிற்சிக் கொடுப்பனவு		214,560.00	151,500.00
மேலதிக நேரக் கொடுப்பனவு		5,136.00	17,112.00
விருந்தோம்பல் செலவுகள்		6,085.00	11,571.00
ஏனைய செலவுகள்		18,672.00	-
பிக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்		43,634.00	-
பல்வேறு தேய்மான ஏற்பாடுகள்			
பெட்டகம்		4,310.00	4,310.00
கட்டிட நிருமாணம்		87,500.00	87,500.00
தளபாடம், உபகரண சேதம்		5,775.00	5,775.00
ஒலி பெருக்கி		5735.00	5,735.00
உபகரணம் மற்றும் பொருத்துக்கள்		16,294.00	16,294.00

மொத்தச் செலவுகள்	**13,773,259.75**	**10,153,670.26**
குறித்த ஆண்டுக்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)	**41,257,463.59**	**42,241,433.46**

பீ. என். முனவீர கணக்காளர் புத்தசாசன நிதியம்	டப்ளிவ்.டீ.எச். ருசிர விதான செயலாளர் புத்தசாசன நிதியம்	எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர செயலாளர் புத்தசாசன அமைச்சு, புத்தசாசன நிதிய உறுப்பினர்

புத்தசாசன நிதியம்

2018.12.31 இலுள்ளவாறான மீதி செவ்வை பார்த்தல்

		வரவு	சேலவு
		ரூ. பா.	ரூ. பா.
பாதுகாப்பு பெட்டகம்		57,456.00	
அலுவலக தளபாடம்		57,750.00	
பொருத்துக்களும் அலுவலக உபகரணங்களும்		162,940.00	
தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்கள்		183,964,000.00	
இலங்கை வங்கி முதலீடு		34,066,268.74	
தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வைப்புத்தொகை		41,064,700.00	
தேசிய சேமிப்பு வங்கி புதிய நிறுவன திட்டத்தின் கீழ் வைப்பு		35,955,701.26	
திறைசேரி உண்டியல் முதலீடு (இலங்கை வங்கி)		86,770,604.86	
மக்கள் வங்கி நிலையான வைப்புக்கள்		123,957,9254.09	
தேசிய சேமிப்பு வங்கியின் மருத்துவ உதவி திட்டத்தின் கீழான வைப்பு		15,000,000.00	
இல.01125 தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்கு		10,204,350.03	
ஓலி பெருக்கி		45,885.00	
காணிகள்		7,000,000.00	
அநுராதபுரத்திலுள்ள கட்டிடங்களும் ஏனைய நிருமாணங்களும்		3,500,000.00	
புத்த [யந்தி நாணய இருப்பு		317,400.00	
புல்வேறு பௌத்த நூல்கள்		1,094,626.49	
பாளி தீக்க சிங்கள மொழிபெயர்ப்பு		2,070,999.38	
2600 வருட பௌத்த நூல்		5,486,880.00	
புத்தக விற்பனைச் செலவு		1,720,234.50	
நெதிமல பௌத்த கலாச்சார நிலையத்திலிருந்தான புத்தக விற்பனைகள்		7,988,635.88	
பாலிதீகா ஆங்கில மொழிபெயர்ப்புக்காக நெடிமாலா பௌத்த கலாச்சார நிலையத்திற்கு முற்பணம் செலுத்தப்பட்டது		1,080,165.00	
பௌத்த கலாச்சார நிலையத்தில் புத்தக விற்பனை		3,955,745.33	
பெறப்பட வேண்டிய திறைசேரி உண்டியல் வட்டி		3,281,469.08	
பெறப்பட வேண்டிய தேசிய சேமிப்பு வங்கி வட்டி		14,199,154.18	
சாமனேர கப்பகரு கருத்திட்ட வட்டி			4,241,013.74
புதிய நிறுவனங்களுக்குப் பெற வேண்டிய வட்டி		1,595,278.74	
தேசிய சேமிப்பு வங்கி – பெறப்பட வேண்டிய மருத்துவ உதவிகள் நிலையான வைப்பு வட்டி		0.00	
பெறப்பட வேண்டிய மக்கள் வங்கி நிலையான வைப்பு வட்டி		457,397.26	
பெறப்பட்ட சமநெற ஆயதன கருத்திட்ட வட்டி			3,531,366.27
ரோயல் ஏசியாஸ்ரிக் சங்கம்		7,282.00	
வட்டியில் தக்கவைக்கப்பட்ட வருமானத்திற்கு வரி செலுத்துதல்		1,154,845.51	
முற்பணம்		1,644.00	
மத்திய வங்கி		34,026,595.13	
இலங்கை வங்கி		135,872.20	
புதிய நிறுவன கொடுப்பனவுகள் செலுத்துதல்			187,500.00
சாமனேர கொடுப்பனவுகள்			0.00
பாலிதீக்காவுக்கான நெடிமாலா பௌத்த கலாச்சார நிலையத்திற்கு			544,409.50

2600 வருட பௌத்தம்" புத்தகத்திற்கு கட்டுரைகளை வழங்குவதற்காக வெளிநாட்டு ஆசிரியர்களுக்கு பணம் செலுத்துதல்			1,168,025.00
சுனாமி உதவி			1,348,796.00
புத்தசாசன நிதியம்			580,519,427.52
தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 100011259873 வட்டி			30,430.65
தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 100010101125 வட்டி			342,435.25
தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 100011259873		776,615.20	
புதிய அனுசரணை உதவித்தொகை கொடுப்பனவுகள்		5,937,659.00	
புதிய நிறுவன கட்டணங்கள்		1,090,000.00	
பிக்கு மருத்துவ உதவி செலுத்துதல்		2,219,000.00	
காகிதாதிகள்		0.00	
புதிய நிறுவன தேர்வு கணக்கு		506,535.00	
மூத்த பிக்கு பதவி உயர்வு திட்டம்		170,499.00	
கட்டிடங்களின் ஒட்டுமொத்த சிதைவு			437,500.00
பாதுகாப்பின் ஒட்டுமொத்த தேய்மானத்தின் முன்பதிவு			34,480.00
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் ஒட்டுமொத்த சிதைவு			28,875.00
ஒலிபெருக்கிகளின் ஒட்டுமொத்த சிதைவு			28,675.00
சாதனங்களின் முன்பதிவு மற்றும் அலுவலக உபகரணங்கள் தேய்மானம்			81,470.00
கட்டிட சிதைவு		87,500.00	
பெட்டக சிதைவு		4,310.00	
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் சிதைவு		5,775.00	
ஒலிபெருக்கி தேய்மானம்		5,735.00	
பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரண தேய்மானம்		16,294.00	
தேசிய சேமிப்பு வங்கி நேரடி வைப்பு வட்டி			19,952,967.89
இலங்கை வங்கி திறைசேரி உண்டியல் வட்டி			7,912,471.18
இலங்கை வங்கி வட்டி			3,509,987.71
மக்கள் வங்கி வட்டி			13,578,054.47
மருத்துவ உதவி			1,628,219.18
புத்தக விற்பனை வருமானம்			2,018,511.50
நன்கொடைகள்			6,472,266.18
நன்கொடைகள் பெறுவனவு			5,500.00
நன்கொடை கொடுப்பனவுகள்		0.00	
சாமனேர நிறுவன மேற்பார்வை		80,597.00	
விருந்தோம்பல் செலவு		6,085.00	
ஏனைய செலவுகள்		18,672.00	
பிரயாணச் செலவுகள்		13,630.00	
எழுதுபொருள் கொள்வனவு		500.00	
கணனி மென்டிபொருள்		214,560.00	
வாகன பழுதுபார்த்தல்		0.00	
எரிபொருள் 300-3812		0.00	
மேலதிக நேரம்		5,136.00	
கட்டுப்பாட்டுச் சபை செலவுகள்		27,069.00	
தேசிய சேமிப்பு வங்கி கார்டியன் அனுசரணை மூலம் பெறப்படும் வட்டி		758,903.52	
பெறப்பட வேண்டிய இலங்கை வங்கி வட்டி		1,536,646.42	
சீன மொழி செலவுகள்		257,975.00	
மொத்தம்		**647,602,382.04**	**647,602,382.04**

புத்தசாசன நிதியம்

2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	2019	2018
சொத்துக்கள்		**ரூ. பா.**	**ரூ. பா.**
நிலையான சொத்துக்கள்	1	10,213,031.00	10,332,645.00
முதலீடுகள்	2	531,760,164.17	503,954,295.10
தேறிய நடைமுறைச் சொத்தக்கள்	3	87,624,758.12	74,053,549.60
		629,597,953.29	**588,340,489.70**
இது பிரதிநிதித்துவப்படுத்துவது			
புத்தசாசன நிதியம்		621,776,891.11	580,519,427.52
பல்வேறு நன்கொடைகள்		6,472,266.18	6,472,266.18
சுனாமி உதவி		1,348,796.00	1,348,796.00
		629,597,953.29	588,340,489.70

இலங்கையின் பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட இந்த நிதி அறிக்கைகள், புத்தசாசன நிதியத்தின் அங்கீகாரத்திற்காக எதிர்காலத்தில் கூட்டப்படும் முதலாவது கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

புத்தசாசன நிதியத்தின் 2018.12.31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தொகை மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு புத்தசாசன நிதியத்தின் கட்டுப்பாட்டு சபை பொறுப்பு வாய்ந்ததாகும்.

டப்.எம்.ரி.கவித் குணவர்தன கணக்காளர் புத்தசாசன நிதியம்	டப்.ரி.எச்.ருசிர விதான செயலாளர் புத்தசாசன நிதியம்	எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர செயலாளர் புத்தசாசன அமைச்சு புத்தசாசன நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்

செயலாளர்
புத்தசாசன நிதியம்

புத்தசாசன நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய விதிமுறைகள் தேவைகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 ஆம் அத்தியாயத்திற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

குறித்த அறிக்கை இதனுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

டப்ளிவ். பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர்

பிரதிகள் :- 1. செயலாளர், புத்தசாசனம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.

2. செயலாளர், நிதி அமைச்சு.

செயலாளர்
புத்தசாசன நிதியம்

புத்தசாசன நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் ஏனைய விதிமுறைகள் தேவைகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 ஆம் அத்தியாயத்திற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

---

1. நிதி நிலை அறிக்கை.

1.1 நிதி நிலை பகுப்பாய்வு

புத்தசாசன நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி மீதிப்படிவம் மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வரவு செலவு கணக்குகள்,குறித்த தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதி வரவு அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் முக்கியமான சாராம்ச கணக்கு கொள்கைகளைக் கொண்ட 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிநிலை அறிக்கை 1996 அன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதியத்தின் 12 ஆவது அத்தியாயம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 (1) அத்தியாயத்துடன் ஒப்பிட்டு பரீட்சிக்க வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச் சட்டம் மற்றும் 1971 இன் 58 ஆம் இலக்க நிதிக ்கட்டளைச் சட்டத்திற்கு அமைய எனது மேற்பார்வையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியல் யாப்பின் 154(6) ஆம் அத்தியாயத்திற்கமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக, நிதியத்தின் நிதிநிலை அறிக்கை மூலம் 2018 இன் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிநிலை மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப் பயன்பாடு, நிதி வரவுகள் மற்றும் இலங்கை அரசதுறை கணக்கியல் விதிமுறைகளுக்கு அனுகூலமாகவும் உண்மைத் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது கருத்தாகும்.

1.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட கருத்துக்களுக்கான அடிப்படை விடயங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) அனைத்து கொடுப்பனவுகளின் போதும் வவுச்சரில் குறிப்பிடப்பட்ட தொகையை உரியவர் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் வகையில் பற்றுச்சீட்டு ஒன்று இருத்தல் வேண்டும். எனினும் கணக்காய்வின் போது ரூ. 1,717,000 இற்குரிய கொடுப்பனவுகளுக்கான அத்தகைய பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சுனாமி நிதி வைப்பான ரூ. 1,348,796 இற்கான மீதியை உறுதிப்படுத்துவதற்கான சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு தரங்களுக்கு (இல. க. த) அனுகூலமானமுறையில் என்னால் கணக்காய்வுகள் மேற்க்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு தரங்களுக்கு ஏற்ப எனது பொறுப்புகள் பற்றி இவ்அறிக்கையில் நிதிநிலை அறிக்கை கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்னும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இக்கணக்காய்வு கருத்துக்களின் பொருட்டு என்னால் ஆதாரமாக கொள்ளப்பட்ட சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதி நிலை அறிக்கை தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிநிலை அறிக்கைகள் இலங்ஙை அரசின் கணக்கியல் தரங்களுக்கு அனுகூலமாகவும், சாதாரணமானதாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதுடன் ஊழல் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய தவறுகளையும் பொய்யான தகவல்களையும் தவிர்த்து நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கு ஏற்றவகையில் தேவையான உள்ளக நிர்வாகத்தை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் கடமையாகும்.

நிதிநிலை அறிக்கைகளை தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ச்சியாக பேணுவதற்குரிய ஆளுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் கடமையாவதுடன், முகாமைத்துவத்தினால் நிதியத்தை கலைப்பதற்கு அல்லது மாற்று வழிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தீர்மானித்தால் அன்றி, தொடர்ச்சியாக பேணுவதன் (நடாத்துவதன்) அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியத்தின் நிலையுறுதிக்கான விடயங்களை வெளிப்படுத்த வேண்டியது முகாமைத்துவத்தின் கடமையாகும்.

நிதியத்தின் நிதிநிலை அறிக்கை தொடர்பில் பரிசீலணை செய்யும் கடமையானது நிர்வாகப் பிரிவினரால் மேற்க்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச் சட்டத்தின் 16 (1) உப அத்தியாயத்திற்கு அமைய நிதியத்தின் வருடாந்த மற்றம் அன்றாட நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு ஏற்றவகையில் வரவுகள், செலவுகள் உடமைகள் மற்றும் சேமிப்புகள் தொடர்பிலான விபரங்களை ஆவணங்களில் பதிவு செய்து அறிக்கைகளை பராமரித்தல் வேண்டும்.

1.4 நிதிநிலை அறிக்கைகள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்.

பொதுவான நிதிநிலை அறிக்கையில் ஊழல் மற்றும் பிழைகளினால் ஏற்படக்கூடிய பிழையான தகவல் இல்லையென்பதை உறுதி செய்தல் மற்றும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையைப் பெற்றுக் கொடுத்தல் எனது நோக்கமாகும். சாதாரண உத்தரவாதமானதும் உயர்தரத்திலான உத்தரவாதமாகக் கொள்ளப்படினும், இலங்கை கணக்காய்வு தரங்களுக்கு அமைய கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது அனைத்து சந்தர்ப்பங்களாலும் கூடியளவு பொய்யான தகவல்கள் கண்டறியப்படும் என்று உறுதி செய்யமுடியாது. ஊழல் மற்றும் பிழைகள், தனியாகவோ அல்லது கூட்டாகவோ செய்யப்படும் தலையீடுகள் காரணமாக கூடியளவு பொய்யான தகவல்கள் குறிப்பிடப்படுவதுடன் அந் நிதிநிலை அறிக்கைகளை அடிப்படையாகக் பரிசீலணைகளை மேற்கொள்ளும் அறிஞர்கள் இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் தீர்மானங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நான் மேலும், கணக்காய்வு நியமங்கள் தொடர்பில், கணக்காய்வின் போது நான் தொழில்முறை தீர்ப்பு மற்றும் தொழில்முறை சந்தேகத்துடன் செயல்பட்டேன்.

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்தக்கான அடிப்படையை உருவாக்குவதற்காக நிதிக் கூற்றுக்களில் மோசடி அல்லது பிழைகள் காரணமாக ஏற்படும் கணிய தவறான விளக்கங்களின் இடரினைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிட்டு செயல்படுத்தியது. மோசடியின் தாக்கம், கூட்டு, மோசடி, வேண்டுமென்றே தவிர்த்தல், தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டைத் தவிர்த்தல் போன்ற காரணங்களால் கணிய ரீதியான தவறான விளக்கங்களின் தாக்கத்தை விட வலிமையானது.

- வாய்ப்புகளுக்கான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டாலும், உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கம் இல்லை.

- கணக்காய்வில் முகாமைத்துவத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நேர்மை மற்றும் நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த செயல்முறை விளக்கம் என்பன உள்ளடங்ககின்றன..

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் நீடித்து நிலைத்திருத்தலின் நிச்சயமற்ற தன்மையின் இருப்பு குறித்து பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கியலுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையின் ஏற்புடமையானது தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவெடுத்தால், நிதிநிலை அறிக்கைகளில் அது தொடர்பான வெளிப்பாடுகளுக்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாவிட்டால், எனது கருத்தை மாற்றியமைத்தல் வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், நீடித்து நிலைத்திருக்கும் தன்மையானது எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளினால் முடிவுறுத்தப்படலாம்.

- நிதியத்தின் நிறுவன கட்டமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் நிதியத்தின் ஏனைய ஆவணங்கள், தகவல் சமர்ப்பித்தல் தொடர்பாக நிதியின் செயற்பாடுகளைத் தொடர்ந்து மதிப்பிடுவதற்கு முறையாகவும், அளவாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா மற்றும் மேற்குறித்த முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் திறம்பட பராமரிக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் ஆய்வு செய்கின்றது.

எனது கணக்காய்வின் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு வெளிக்கொணர்வுகள், உள்ளக நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத்திற்கு பொறுப்பான தரப்புகளுக்கு தெரிளப்படுத்தப்பட்டுள்ளது.

2. ஏனைய அனறாட நிர்வாக விதிமுறைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு கட்டளைச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 6 (1) (இ) (iii) அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய நிதியத்தின் நிதிக்கூற்றறிக்கை முன்னைய வருடத்துடன் ஒத்துப்போதல்.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 6 (1) (இ) (iii) அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய முன்னைய வருடங்களில் பரிந்துரை செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதியத்தின் நிதிக்கூற்றறிக்கையில் உள்ளடக்கப்படுதல்.

பின்பற்றப்பட்ட விதிமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மற்றும் விடயங்கள் கட்டுப்படுத்தலின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 12(அ)அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய நிதியத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவர் ஒப்பந்தமொன்றுக்கு நேரடிளாகவோ மறைமுகமாகவோ சாதாரண வியாபார விதிமுறைகளுக்கு அப்பால் தொடர்புபட்டிருத்தல்.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 12(இ)அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய குறித்த எழுத்து மூல சட்டத்திற்கு அல்லது நிதியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் செயற்பட்டிருத்தல்.

விதிமுறைகள்		விபரங்கள்
(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிச்சட்டம்		
(i) **நிதிச் சட்டம்** 396	-	2013 தொடக்கம் 2017 வரையில் நிதியத்தினால வழங்கப்பட்டும் சமர்ப்பிக்கப்படாத ரூ. 56863 பெறுமதிக்குரிய 07 காசோலைகள் தொடர்பில இவ்அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரை எவ்வித நடவடிக்கையும மேற்கொள்ளப்படவில்லை.
(ii) நிதிச் சட்டம் 502 (2)	-	ரூ. 10,213,031 பெறுமதியான நிரந்தர உடமை தொடரபில் ஆவணம் எதுவும் இல்லை.
(iii) நிதிச் சட்டம்	-	ரூ. 8,652,506 பெறுமதியிலான பௌத்த நூல்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.
(ஆ) 2006 டிசம்பர் 22 ஆம் திகதி பீஎப்/423 ஆம் இலக்க அரச கணக்கியல் சுற்றறிக்கை மற்றும்2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச கணக்கியல் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிச் சுற்றறிக்கை 877(2)(இ) நிதிச்சட்டம்.		கணக்கியல் வருடம் முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பனும், இரண்டு வருடங்களும் 08 மாதங்கள் முடிவடைந்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 12(உ)அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய நிதியத்தின் சட்டதிட்டங்களுக்கு முரணான வகையில் செயற்பட்டிருத்தல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 12(ஊ)அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய நிதியத்தின் உடமைகள் முறையாகப் பயன்படுத்தப்படாமை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

கீழே கூறப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதி அறிக்கைக்கு அமைய குறித்த வருடத்தில் ரூ. 55,366,914 நிதியத்தின் வருமானமாகக் காணப்பட்ட போதிலும் ரூ. 13,773,260 அதாவது 25 விதமான நிதியானது நிதியத்தின் நோக்கங்களுக்காக பயன்னடுத்தப்பட்ட போதிலும் வருடாந்தம் மேலதிகமாக நிதி முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முதலீட்டுப் பெறுமதி ரூ. 531,760,164 ஆகும். புத்தசாசனத்தை போஷித்து பாதுகாப்பதற்கு சிதியத்தின் நிதியானது பயன்படுத்த வேண்டியிருப்பனும், வருடாந்தம் வருமானத்திற்கேற்ப நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஆ) ரூ. 13,031,828 பெறுமதியான முற்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய வேறு மீதிகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படாததுடன், முன்னைய வருடங்களுக்கான நிதி அறிக்கைக்கு அமைய ரூ. 1,087,447 உம், 06 வருடங்களுக்கு மீதி ரூ. 11,944,381 என்பன 03 மூன்று வருடங்களுக்கு ஆமலானவை என அறியப்பட்டதுடன் அவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) மொத்தம் ரூ. 1,712,435 பெறுமதியிலான மீதி தொடரிபில் காலம் குறிப்பிடப்படவில்லை. முன்னைய வருடங்களுக்கான சிதி அறிக்கைகளுக்கு அமைய ரூ. 544,409 ஆனது 04 வருடங்களுக்கும் மீதி ரூ. 1,168,025 ஆனது 03 வருடங்கள் பழமையானதுடன் இதற்கு தீர்வு காண்பது தொடர்பில் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

டப்ளிவ். பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர்